16-06-2011

## தலைப்பு : பாலினைத் தொழிற்றுறையும் பெண்கள் மீதான சுரண்டலும்

**இத்தலைப்பில் தேவசபா தனுஜன் அவர்களின் தொடக்கவுரையுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்கள் வருமாறு,**

"பெண்களின் உடல்கள் மிகுந்த ஆதாயத்தை வழங்கும், மலிவான விலையில் ஏற்றுமதியாகும் சரக்குகளாகிவிட்டன" என்;கிறார் தென்கொரிய ஆய்வாளர் மின் சூய். இன்று உலகமயமாதலின் விளைவாகப் பாலியல் வியாபாரமனது ஆயுத, போதைவஸ்த்து வர்த்தகங்களுக்கு சமமான ஒன்றாக மாறியுள்ளது. சர்வதேச அளவில் இதனூடாக வருடமொன்றுக்கு 100 பில்லியனுக்கும் அதிகமான அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்படுகின்றது.

இன்று இலங்கையில் 40 000க்கும் மேற்பட்ட பாலியல் வியாபாரிகள் உள்ளதாகக் கணிப்புகள் சொல்கின்றன. ஆனால், இத்தொகை வேறுபடக்கூடிய வாய்ப்புகள் இருப்பதுடன், இதற்குள் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உள்ளடக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (பாலியல் தொழிலாழரைத் தேடிச் செல்லும் ஆண்களின் தொகை 2 லட்சத்திற்கும் அதிகம்.)

அத்துடன், கடந்த வருடம் சிங்கப்பூருக்கு நடன நிகழ்ச்சிக்கென அழைத்துச்செல்லப்பட்ட பெண்கள் விபச்சாரத்திற்காக விற்பனை செய்யப்பட்டனர். இதற்கு முன்னரும் இங்கு பல பெண்கள் தமிழ் பயண முகவர்களால் ஏமாற்றப்பட்டுக் குழந்தைகளுடன் நீதி கேட்டு அலைந்தனர்.

இந்நிலைக்குப் பிரதான காரணங்களாக பின்வரும் விடயங்கள் அமைகின்றன,

வறுமை, விலைவாசி, வேலையின்மை, பாதள உலக தாதா அரசியல்.
கடந்தகால நீண்ட யுத்தம் உருவாக்கிவிட்ட நிலைமைகள்.
சுற்றுலாத்துறையின் வேகமான வளர்ச்சி. சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகப் பலி கொடுக்கப்படும் சிறு பிஞ்சுகள், பெண்கள்.

உ-ம் : தென்கொரியாவில் தேசிய அபிவிருத்தி, தேச பக்தி என்ற பெயர்களில் உலக வங்கியின் திட்டத்திற்கு அமைய, உல்லாசப் பயணத்துறையின் விருத்தி என்னும் பெயரில் பாலியல் வியாபாரம் மிக வேகமாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

இதையொரு தொழிலாக முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாமைக்குக் காரணங்களாகப் பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன.

கட்டாயப்படுத்தப்பட்டு, பல்வேறு நிர்ப்பந்தங்களால் பாலியல் தொழிலுக்குள் பெரும்பாலானவர்கள் தள்ளப்படுதல்.
சுய விருப்பின்பேரில் இத்தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருத்தல்.
அடிமை முறையின் தொடர்ச்சியாகப் பாலியல் வியாபாரம் விளங்குகின்றமை.
வேறு தொழிலுக்கு மாறுவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படல். மீட்சியின்மை.

எனவே, ஒரு சிலர் சுய விருப்பின் பேரில், சுதந்திரமாகப் பணத்திற்காக இச் செயலில் ஈடுபடும்போது பாலியல் தொழில் எனவும், ஆட்களை அடிமைப்படுத்தி வைத்து வியாபாரமாக மேற்கொள்ளப்படுகின்றபோது பாலியல் வியாபாரம் எனவும், சிறுவர்களைப் பயன்படுத்துகின்றபோது பாலியல் துஸ்பிரயோகம் எனவும் குறிப்பிட முடியும்.

கி.மு 18 ஆம் நூற்றாண்டில் பாலியல் வியாபாரம் மொசெப்பத்தேமிய நாகரீகத்தில் மிகவும் சிறப்பான நிலையில் இருந்துள்ளது. இங்கு கி.மு 2300களில் சிவப்பு விளக்குப்பகுதி மிகவும் சுறுசுறுப்பாகத் தொழிற்பட்டதாகக் குறிப்புகள் உண்டு. இந்நிலைக்குச் சட்டமேதை ஸோலன் வழிவகுத்தார்.

2000ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்து, இந்தியா, பபிலோனியா, கிறீஸ் ஆகிய நாடுகளில் தொழிலாக அங்கீகாரம் பெற்றுவிட்டது. மேற்கிலும் மத்திய கிழக்கிலும் மதங்களின் துணையுடன் இடம்பெற்றுள்ளது. (இந்தியாவில் தேவதாசி முறை)இன்றைய முதலாளித்துவ, உலகமயமாதலின் உறுதுணையுடன் பல்தேசியமயப்பட்டுள்ள பாலியல் வியாபாரம்.

உலகமயமாதலின் காரணமாக அதிகரிக்கும் வறுமை, அதனால் பெரிதாகும் வர்க்கங்களுக்கிடையிலான இடைவெளி, இவற்றால் பாலியல் வியாபாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிகரிப்பு ஏற்படுகின்றது. அதிக செல்வத்தைக் கையகப்படுத்தி வைத்திருக்கும் அரக்கர்கள் சிலர் தமது சிறு தேவைகளுக்குக்கூட பாமரர் பலரின் வாழ்வைச் சிதைக்கக்கூடிய அசுர சக்தி கொண்டவர்களாக விளங்குகின்றனர்

(மிகுதி பக்கம் 2 இல்)

## எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

23 - 06 -2011
**மதங்களின் தோற்றம்**
- இதயராஜா

30 - 06 -2011
**இலங்கைத் தமிழரிடையே "தற்கொலைகள்"**
- நியூட்டன்

07 - 07 -2011
**பொருள்முதல்வாதமும் கருத்துமுதல்வாதமும்**
- சி. சிவசேகரம்



டொமினிக் ஜீவா (பி. ஜூன் 27, 1927, யாழ்ப்பாணம்) ஈழத்தின் முக்கியமான ஒரு சிறுகதையாசிரியர், பதிப்பாளர். இவரது தண்ணீரும் கண்ணீரும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது. 1966 இல் மல்லிகை என்ற மாத இதழை ஆரம்பித்து தொடர்ந்து நடத்தி வருகிறார். இவரது எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் ஈழத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சுயவரலாற்று நூலாகும்

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்ச்சித்திசையில் மாற்றியமைக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

பால்வினைத் தொழிற்றுறையும் பெண்கள் மீதான சுரண்டலும்

*முன் பக்கத் தொடர்ச்சி..*

பாலியல் தொழிலுக்கு வழங்கப்படும் சட்டரீதியான அங்கீகாரம் அதில் ஈடுபடுவோருக்கு பாதுகாப்பு (மருத்துவ பரிசோதனைகள், ஏமாற்றப்படாமல், நியாயமான கூலி) கிடைக்க வழிசமைப்பதுடன், உரிமைகளுக்காகப் போராடக்கூடிய நிலமையையும், உளப் பாதிப்புக்கள் குறையக்கூடிய வாய்ப்பையும் வழங்குகின்றது.

தமது சுய விருப்பின்பேரில், சுதந்திரமாக இத்தொழிலைச் செய்பவர்களுக்கு சட்டரீதியான அங்கீகாரம் தேவையானதும், பொருத்தமானதுமாகும். ஆனால், ஏமாற்றப்பட்டு, கட்டாயத்தின் பேரில், அடிமைப்படுத்தப்பட்டு, விருப்பமின்றி இதில் ஈடுபடுத்தப்படுகின்றவர்களுக்கு சட்டரீதியான அங்கீகாரம் மிகவும் பாதகமாக, அவர்களின் அடிமைவாழ்வை அங்கீகரிப்பதாக அமைந்துவிடும். அவர்களுக்கு இவ் அடிமைத்தனத்தில் இருந்து மீட்சியும், புனர்வாழ்வுமே மிகவும் அவசியமாகும்.

சட்டரீதியான அங்கீகாரம் கிடைத்தாலும், அரசாங்கங்களின் வரிகள், காப்புறுதிக் கட்டணங்கள், அனுமதிப்பத்திரக் கட்டுப்பாடுகள் போன்றவற்றை எதிர்கொள்ள முடியாது கள்ளச் சந்தைகள் அதிகரிக்கும் வாய்ப்புக்களும் மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக ஜேர்மனியில் 2002இல் அங்கீகரித்தமையையும், அதன்பின்னான விளைவுகளையும் குறிப்பிடலாம். அங்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு ஐந்து ஆண்டுகள் வரை எவருமே தம்மைப் பதிவு செய்ய முன்வரவில்லை. அதேநேரம் இத்தாலி, நோர்வே, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பகுதியாக பாலியல் தொழில் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இத்தொழிலை விரும்பிச் செய்வோர் - மாணவிகள், வீதியோரங்களில் தொழில் புரிவோர் (30%) விருப்பமின்றிச் செய்வோர் - வேலைகளுக்கென அழைக்கப்பட்டு, கடத்தப்பட்டு ஏமாற்றப்பட்டு இத்தொழிலில் தள்ளப்படுவோர். (70%)

சர்வதேச அளவில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளும், இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்புணர்வுகள், அவர்களின் தேவைகளுக்காக உருவாகும் பாலியல் வியாபாரிகள் சமூகம்.

உ-ம் : ஈராக், ஆப்கானிஸ்தானில் ஆண்கள் வெளியில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமையில் பெண்கள் குடும்பத்தினரைக் காக்க இத் தொழிலில் இறங்குதல். ஆண்கள் இல்லாத குடும்பப் பெண்கள் வழ்வாதாரத்துக்காக ஈடுபடல்.

2ஆம் உலக யுத்தக் காலப்பகுதியில் யப்பான் இராணுவத்தின் பாலியல் இச்சைகளிற்காக சீன, கொரிய, இந்தோனேசியப் பெண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்க இராணுவம் நிலைகொண்டுள்ள நாடுகளின் அரசுகளுடன் அமெரிக்க அரசு செய்துகொள்ளும் R & R உடன்படிக்கை. (ஓய்வும் பொழுதுபோக்கும்) இந்த உடன்படிக்கையின் காரணமாக பல்வேறு அரசாங்கங்கள் தங்கள் நாட்டுப் பிரஜைகளை ஏமாற்றி விபச்சாரப் படுகுழிக்குள் தள்ளியுள்ளன. பிலிப்பைன்ஸ் நாட்டு அமெரிக்கத் தழங்களில் இருந்த இராணுவத் தந்தையரைத் தேடி அமெரிக்காவிற்குப் பாதிரியார் ஒருவர் குழங்தைகளுடன் போன வரலாறு இங்கு நினைவுகூரத்தக்கது.

சூழல் பாதிப்புக்கள், காலநிலை மாற்றத்தால் இயற்கை ஒழுங்கில் ஏற்படும் மாற்றம் பாரம்பரிய தொழில்களை மிகவும் பாதித்து விடுவதால், மக்களுக்கு ஏற்படுகின்ற கையறு நிலையும், அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் சர்வதேச, உள்நாட்டுச் சக்திகளும்.

உ-ம் : இதற்குச் சிறந்த உதாரணமாக தாய்லாந்தின் ஈசான் மாகாணத்தைக் குறிப்பிட முடியும். இங்கு நிலத்தடி நீர் வற்றிப்போனதால் விவசாயத்தில் ஏறபட்ட வீழ்ச்சி அங்குள்ள பெண்களை பாலியல் வியாபாரப் படுகுழியில் தள்ளியது.

அரச துறைகளின் வீழ்ச்சி, வேலையின்மை, ஏற்றுமதி நோக்கிய பொருளாதாரம் போன்றனவும் இத்தொழிலுக்கு மக்கள் தள்ளப்படக் காரணமாகின்றன.

இன்றுவரை பாலியல் வியாபாரம் 'வயது வந்த இருவர் தமது மனமொத்துச் செய்கின்ற ஒரு செயற்பாடு' என்றோ, 'பணத்திற்காக ஒருவர் இன்னொருவரின் பாலியல் தேவையை நிவர்த்தி செய்கின்ற சேவைத் தொழில்' என்றோ நியாயப்படுத்தப்பட முடியாமைக்குப் பிரதான காரணிகளாகப் பின்வரும் விடயங்கள் அமைகின்றன.
பெண்கள் மாத்திரம் அதிக அளவில் இத்தொழிலில் ஈடுபடுவது.

ஏன் ஆண்கள் அத்தகைய பெரும் எண்ணிக்கையில் ஈடுபடுத்தப்படுவதில்லை? உலக சனத்தொகையில் அரைப்பங்கினராக உள்ள பெண்களுக்கு குடும்பத்துக்கு வெளியே பாலியல் தொடர்பு வைத்துக்கொள்வது மிகவும் பாரதூரமான விடயமாக உள்ளது?

இதில் ஈடுபடுத்தப்படும் பெரும்பாண்மையான பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுவது.
பாலியல் தொழிலில் ஈடுபடுவோரின் சமூக அந்தஸ்து மிகவும் மோசமாக உள்ளமை. ஒழுக்கமற்றவர்களாகக் களங்கம் கற்பிக்கப்படல்.
சுயவிருப்பின்றிக் கட்டாயத்தின்பேரில் இத்தொழிலில் ஈடுபடல்.
இத்தொழிலில் இருந்து விடுபடவோ, வேறு தொழிலைத் தெரிவு செய்யவோ வாய்ப்புக்கள் மிக அரிதாகவுள்ள நிலை.
விபச்சாரக் குற்றத்திற்காக ஆண்கள் தண்டிக்கப்படுவது மிகவும் குறைவாகவுள்ளமை.

உலகின் மிக அபாயகரமான அடிமை வியாபாரமாக, மிக வேகமாக வளர்ந்துவரும் குற்றத்துறையாக இன்று விபச்சாரம் உள்ளது.
இதில் ஈடுபடுகின்ற பெண்கள் சமூகத்தின் அனைத்து மட்டங்களாலும் அச்சுறுத்தப்படுகின்ற, ஆதரவற்ற நிலையில் இருப்பதுடன், தரகர்கள், பொலிசாரின் கெடுபிடிகள், பலாத்காரம், சித்திரிவதைகளால் ஏற்படும் பிரச்சினைகள், மன அதிர்ச்சி போன்ற பல்வேறு அகம், புறம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

மனிதாபிமானமற்ற வகையில் இடம்பெறும் வாடகை, குத்தகை முறைமை. வன்முறையின் தாக்கம்.

உளவியல் பாதிப்புக்கள், ஒழுங்கீனம், உறவுகளின்போது மரத்துப்போன உணர்வு நிலை, இவர்களுக்கு வழங்கப்படும் வருமானத்தின் வீதம். (தரகர்களின் தரகுப்பணம் 70% மாக இருத்தல்.) என்பனவும் இவர்கள் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகளாக உள்ளன.

இதில் ஈடுபடுத்தப்படும் பெண்கள் மனித உயிர்களாக அன்றி அவர்களை ஒரு பண்டமாகவே பார்க்கும் நிலை காணப்படுகின்றது. இவர்களைக் கடத்துதல், விற்றல் என்பன மிகவும் சுலபமான விடயங்களாக இன்றும் இடம்பெறுகின்றன. சர்வதேச அளவில் இடம்பெறுகின்ற மனிதக்கடத்தல் நடவடிக்கையில் 79% விபச்சாரத்திற்காகவே இடம்பெறுகின்றது.

# மதங்களின் தோற்றம்

*23-06-2011 அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள்*
*-இதயராஜா*

*1. மனிதன் ஆறாவது அறிவைப் பெற்று மனிதனாகப் பரிணமித்து வாழத்தொடங்கிய ஆரம்பகாலத்திலேயே மதமென்ற பெரு விருட்சத்திற்கு விதை போடப்பட்டுவிட்டது.*

*2.தனது வலிமையால் தன்னையும் தனது கூட்டத்தினையும் காத்துக் கொள்ள முடியாமற்போன காலகட்டத்தில், அவன் தனது சக்திக்கு மேலான ஒரு சக்தி இருப்பதாகவும் அதை வேண்டிக்கொள்வதன் மூலம் தமக்குப் பயன் கிடைக்குமென்ற எண்ணமும் அவன் மனதில் தோன்றியன.*

*3.இயற்கை அனர்த்தம், கொடிய விலங்குகள் என்பவறிறிலிருந்து பாதுகாப்புப் பெறவும், வேட்டையாடவும் மனிதன் கூட்டமாக வாழவேண்டிய தேவை இருந்தது. தமது வாழிடத்தில் தமக்கு உதவிசெய்த, அச்சுறுத்திய இயற்கைச் சக்தியை வழிபடத் தலைப்பட்டான் அதுவே அவர்களின் தெய்வமாயிற்று, அதுவே பயபக்தியாயிற்று.*

*4. மனிதன் கடவுளைத் தன்னைப் போலவும் தன்னைவிடப் பலமடங்கு ஆற்றலுள்ளவராகவும் (பல கரங்கள், தலைகள், ஆயுதங்கள்) படைத்தான். தனக்கு விருப்பமானவற்றினைக் கடவுளுக்கும் செய்தால் பிரீதி ஏற்படும் என நினைத்தான்.*

*5.இயற்கைச் சக்தியைத் தனிமையில் "எம்மைக்காத்தருள்" என்று வழிபட்ட மனிதன், படிப்படியாகத் தனது கூட்டத்தினருடன் கூட்டமாக வழிபடத் தொடங்கினான். அக்காலத்தில் வழிபடுவதற்கென ஒரு நிரந்தர இடம் இருக்கவில்லை. அதற்கான சாத்தியமும் அப்பொழுது இல்லை. காரணம் அவர்கள் இடம்பெயர்ந்தபடி இருந்தமை.*

*6.மனிதன் விவசாயத்தில் ஈடுபட்டு குளங்கள், நதிகள் முதலிய நீர்நிலைகளின் அருகில் நிலையாக வழத் தலைப்பட்டபின், வழிபாட்டுக்கெனத் தனியான இடங்களை ஒதுக்கிக்கொண்டான்.*

*7. வழிபாட்டு இடத்தினைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் வழிபாடு நடத்தவும் ஆட்களை நியமித்தான். அவர்களே அறங்காவலர்கள், பூசாரிகள், அர்ச்சகர், புரோகிதர் ஆயினர்.*

*8.ஒவ்வொரு மனித குழுமத்திலும் தோன்றிய ஆன்றோர் தத்தமக்குரிய வழிபாட்டு முறைகள், கட்டுப்பாடுகள், ஒழுக்கவிதிகள், சடங்கு சம்பிரதாயங்களை வகுத்தனர். படிப்படியாக உருவாக்கப்பட்ட அவற்றையே மந்திரங்கள் என்று கூறுகின்றோம்.*

*9.மனிதர்களின் சிந்தனை சக்தி வளர வளர அவர்களது மனங்களில் கடவுள் கொள்ளைபற்றிய பற்பல கேள்விகள் தோன்றத் தொடங்கின. தமது அறிவுக்கும் அனுபவத்திற்கம் சக்திக்கும் உட்பட்டேவாறு அக்கேள்விகளுக்கான விடைகளையும் விளக்கங்களையும் தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொண்டனர். வேறு சிலர் விடைகளைத்தேடி அலைந்து பிற அறிஞர்கள் மூலமாகவோ அல்லது சுய அனுபவத்தின் மூலமாகவோ பெற்றுக் கொண்டனர். அவர்கள் வெளிப்படுத்திய உண்மைகளே மதங்களாக உருப்பெற்றன.*

*10.மனிதனின் வாழிடம், வாழ்க்கைமுறை, சமூகநிலை, பொருளாதாரக் கட்டமைப்பு, ஆட்சி முறை, பண்பாடு நாகரிகம் போன்ற இன்னோரன்ன காரணிகளே அவனது சிந்தனையைக் கட்டமைக்கின்றன. இந்த வரலாற்று இயங்கியலுக்கு அமையவே அந்தந்தக் காலங்களுக்குரிய சிந்தனைகளும் அதன் பேறான தெய்வங்கள், வழிபாடு என்பன அமைந்துள்ளன. இனியும் அமையப்போகின்றன.*

*11.இனக்குழுமுறை சிதையாத கட்டமைப்பே இந்தியச் சமூகம். எனவே பழங்கால தெய்வ வழிபாடுகள் இன்றும் நிலவுகின்றன. இங்கு பேரரசு உருவாக்கம் பூரணத்துவம் அடையாமையால் சிறுதெய்வ வழிபாடு சாத்தியமாயிற்று.*
*அதனூடாக ஒரு தெய்வக் கோட்பாட பரிணமிக்கின்றன.*

*12.ஐரோப்பிய சமூகத்தில் இனக்குழுமுறை முற்றாக அழிக்கப்பட்டு வர்க்க சமூகம் கட்டமைக்கப்படும்போது, அத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஒரே ஒரு தெய்வம் தேவைப்படுகின்றத. அதனாலேயே அங்கு எல்லாம் வல்ல ஒருதேவன் இக்கின்றான்.*

*13. கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள், இந்துக்கள் போன்ற சிறு தெய்வங்களை நம்புகின்றார்கள் ஆனால் தெய்வம் என்ற நிலையில் இல்லாமல் சக்திவாய்ந்த தேவதைகளாகவே கொள்கின்றனர். அங்கு பேரரசும் சக்கரவர்த்தியும் வைத்ததே சட்டம், என்ற நிலையில் அதற்குமேல் ஒருவரும் தேவைப்படவில்லை.*

*14. எனவே மனிதன் தனது ஆறாவது அறிவைக் கொண்டு ஏன்? எதற்கு? ... என்று சிந்திக்கத் தலைப்பட்டபொழுது, இன்றைய விஞ்ஞானக் களஞ்சியங்கள் அவனிடம் இல்லை. முயன்று தவறியே அனைத்தையம் கற்றுக்கொண்டான். நெருப்பைக்கண்டு பிடித்தது, கற்களை ஆயுதமாக்கியது அனைத்துமே பெரிய சவால்களுக்கு மத்தியிலேயே. ஆகவேதான் தனது அன்றைய கேள்விக்கு இயற்கைச்சக்தி அச்சமூட்டுவதாகவும் அதுவே அனைத்துக்கும் மூலமாகவும் தெரிந்தபோது அதனை வழிபட்டு வேண்டுதல் செய்தான். ஆனால் அறிவு வளரந்து ஆற்றல்கள் பல பெற்றபொழுதிலும், சுரண்டும் வர்க்கம் தமக்குச் சாதகமாகத் தத்துவத்தினையும் கடவுளையும் பயன்படுத்திக்கொள்கின்றன. இன்னல்களுக்குத் தீர்வு கிட்டாத மனிதர்கள் புதிய மார்க்கத்தைத் தேடாமல், விரித்த வலையிலேயே மீண்டும் மீண்டும் வீழ்த்தப்பட்டுக் கிடக்கின்றனர்.*

## வலை

**படைப்புவாதமும் பரிணாமக் கோட்பாடும்: தொடரும் போர்**

பகுத்தறிவுவாதம். டார்வினிசம் போன்றவற்றின் மீது மதங்கள் நடத்தும் போர் பற்றிய விரிவான கட்டுரை

முழுமையாகப் படிக்க: valai.thulaa.net/21

மூலம் : *http://www.kalachuvadu.com/issue-120/page32.asp*

**Google Translate**

தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் உரைப்பகுதிகளை மொழிபெயர்க்கும் மென்பொருளை கூகிள் உருவாக்கியுள்ளது.

முழுமையாகப் படிக்க: valai.thulaa.net/22

மூலம் : *http://translate.google.com/?sl=ta&tl=en&q*

**மதங்களும் பெண்களும்**

இக்கட்டுரை, மதங்கள் பெண்கள் மீது நடத்தும் வன்முறையை விரிவாக விளக்குகிறது

முழுமையாகப் படிக்க: valai.thulaa.net/23

மூலம் : *http://periyaarpaasarai.blogspot.com/2008/03/wwwdravidarorg.html*

**கடாபிக்குப் பிந்தைய லிபியாவிற்கு எண்ணெய் நிறுவனங்கள் தயாரிப்பு செய்கின்றன**

லிபியாவில் ஏகாதிபத்தியக் கொள்ளைக்கான தயாரிப்புக்கள் எவ்வாறு நடக்கின்றன என்பது பற்றிய குறிப்பு

முழுமையாகப் படிக்க: valai.thulaa.net/24

மூலம் : *http://www.wsws.org/tamil/articles/2011/june/110620_oil.shtml*

**சாமியார் கம்பேனி பிரைவேட் லிமிடெட்!**

எல்லாவிதமான பிரச்சனைகளுக்கும் உடனடி "ஆன்மீக ரீசார்ஜ்" என மதத்தைச் "சுரண்டல் லாட்டரி" போல மாற்றியிருப்பதுதான் இன்றைய நவீன சாமியார்களின் மிக முக்கியமான சாதனை.

முழுமையாகப் படிக்க: valai.thulaa.net/25

மூலம் :*http://www.vinavu.com/2011/06/20/saamiyar-company/*

**வேலை அழுத்தத்தால் அவதியுறும் ஐரோப்பிய மக்கள்**

முதலாளித்துவம் தன்னுடைய அதி உச்ச இலாபத்தினை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, தன்னை நகர்த்திக் கொண்டு வருவதால் தொழிலாளர்களின் எந்த நலனையும் பற்றி கவலைப்படுவது கிடையாது. மாறாக அவர்களின் உழைப்பினை எந்த அளவிற்கு சுரண்ட முடியுமோ, அந்த அளவிற்கு சுரண்டியே தன்னுடைய இலாபத்தினை பெற்றுக் கொள்கிறது.

முழுமையாகப் படிக்க: *valai.thulaa.net/26*

மூலம் : *http://www.ndpfront.com/?p=21700*

**16-1-2011 நடந்த உரையாடலில் கலந்துகொண்டவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு**
**வதீஸ்**

வியாபாரம் என்பதை ஆங்கிலத்தில் பலவகையாக அழைக்கப்படுகின்றது Trade, Career, Employment, Professional, job இவ்வாறு வேறுவேறாக ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டாலும் தமிழில் வியாபாரம் என்றே பொதுவாக அழைக்கப்படுகின்றது இதிலிருந்துதான் பாலியல் வியாபாரம் என்பது வந்தது

சேவைகள் எல்லாவற்றையும் தொழில் என்ற வகைக்குள் அடக்கிவிடமுடியாது

பாலியல் தொழில் செய்பவரை பால்வினை கூலியாள் ன்று கூடமுடியாது அல்லது அவ்வாறு சொல்லுவது கடினம்

இன்று இந்தியாவிலே அல்லது பாக்கிஸ்தானிலோ ஒரு குடும்பம் கடன்பட்டால் அந்தக்குடும்பத்தினுடைய பிள்ளைகளை அடிமைகளாக வைத்திருந்து வேலைவாங்கும் நடைமுறை ஒன்று இருக்கின்றது.
பாலியல் வியாபரத்தின் தொடக்கம் அல்லது தொடக்கப்புள்ளி எதுவாக இருக்கும் என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினமான ஒரு விடயம்.

இலங்கையில் அனுராதபுரம் பாலியல் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். அனுராதபுரம் வடக்கிற்கும் தொற்கிற்கும் இடையே இராணுவத்தினர் வந்து செல்லுகின்ற அல்லது இளைப்பாறிச் செல்லுகின்ற ஒரு இடமாக இருப்பதன் காரணமாக அங்கே பாலியல் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள்.

வல்வெட்டித்துறையில் ஆமிக்காரர்கள்; வந்ததன் பிற்பாடு அவர்களுடைய முகாம்களை சுற்றி சில பாலியல் தொழில் செய்யும் வீடுகள் இருக்கின்றன.

ஆண் விபச்சாரம் செய்பவரையும் விபச்சாரி என்றே அழைக்கப்படுகின்றது. விபச்சாரி என்பது ஒரு பொதுப்பெயர்.

பாலியல் தொழில் இருக்கு என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் இந்தத் தொழிலை செய்வதற்கான சமூக காரணங்கள் இருக்கும்வரை இந்த தொழில் இருந்துகொண்டுதான் இருக்கும்.
அடிப்படை உரிமைகள் சமமாக பாதுகாக்கப்படும் சந்தர்ப்பத்தில் இவை இல்லாமல் போகலாம்.

பாலியல் தொழிலை குறைக்கவேணுமென்றால் பாலுணர்வு என்பது எல்லோருக்கும் சாதாரணமானது அவ்வாறு உணர்வுகள் ஏற்படும்போது எவ்வாறு அதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை விளங்கிக்கொண்டால் சரியாகும்

பொதுவாக எல்லோரிடமும் காம இச்சை இருக்குஒரு வேலைக்கு செல்லும்போது முதலாளியை கவரவேண்டும் என்ற மனநிலையில் கவர்ச்சியாக செல்லுவதும் ஒரு விதமான வியாபாரம் அல்லது இச்சைதான். நுகர்வுச் சமுதாயம் இதை கூடுதலாக திணிக்கின்றது அத்தோடு முதலாளித்துவ சமுதாயத்தில் இவற்றை அகற்றுவது கடினம்.

சீனாவில் புரட்சி முடிந்த பின்னர் பாலியல் தொழில் இல்லாமல் செய்யப்பட்டது.

இஸ்லாமில் ஆண் பெண் இருவருக்கும் சமமான தண்டனைகள் உண்டு

ஆணோ பெண்ணோ தனது தேவைகளை அடைவதற்காக இவற்றை பயன்படுத்துவதை எவ்வாறு அழைக்கலாம்?

ஒரு பெண் உடலை விற்றுத்தான் ஒன்றை அடைய வேண்டும் என்றால் பெண்கள் தங்களது உடலை போகப்பொருளாக பயன்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள் என்பதுதான் பொருள்.
இன்று பணங்களை அதிகமாக வைத்திருக்கும் பெண்கள் ஆண் விபச்சாரிகளை சாதாரணமாக வைத்திருக்கின்றார்கள். இத்தாலியில் இது தொழிலாக இருக்கின்றது
பாலியல் தொழில் உழைப்பு அல்ல

பாலியல் தொழில் இருப்பதற்கான காரணம் பெண்களை போகப்பொருளாக பார்ப்பதுதான்.

ஆப்கானிஸ்தான் ஆண்களை பொறுத்தவரை பெண்கள் வீட்டு வேலைகள் செய்வதற்கும் குழந்தைகளை பெறுவதற்கும் மாத்திரமே உள்ளார்கள் என கருதுகின்றார்கள் அவ்வாறே பெண்களை நடத்துகின்றார்கள்.
முன்னைய காலத்தில் சில நாடுகளில் ஒரு பெண்ணை காதலிப்பதை பெரிய விடயமாகக்கூட பார்த்திருக்கிறார்கள்.

விபச்சாரத்தில் ஆணும் பெண்ணும் ஈடுபடுகின்றார்கள் அதில் பெண்ணின் நிலை மட்டுமே மோசமாக பார்க்கப்படுகின்றது
பெண் மட்டும்தான் தாழ்ந்து பார்க்கப்படுவதையும் தாண்டி எல்லா மதங்களுமே விபச்சாரத்தை எதிர்க்கின்றது அதேவேளை இரட்டை நிலமையினையும் கடைப்பிடிக்கின்றது. அது மட்டுமல்லாது மதங்கள் பெண்களை போகப்பொருளாக பார்க்கின்றது.

முற்போக்கு அரசியல் சக்திகள் இந்தப்பிரச்சினையைப் புரிந்துகொண்டு பால்வினைத்தொழிலாளரை ஒன்றுதிரட்டி, அவர்களுக்காகப் போராடும் வழிமுறைகளைக் கண்டறியவேண்டும். இல்லாவிட்டால் அரச சார்பற்ற நிறுவனங்கள் இவற்றை கையிலெடுத்துவிடும்.

பண்டைய அடிமைமுறையினுடைய நீட்சி அதோடு பொருளாதார சுரண்டல் மற்றும் ஆணாதிக்க கண்ணோட்டம் போன்றவை பாலியல் தொழில் தொடர்ச்சியாக இருப்பதற்கான முக்கிய காரணிகள்
இராணுவ ஓய்வு நிலையங்கள் இவ்வாறான பாலியல் தொழில் இடம்பெறுகின்ற இடங்களாக இருக்கின்றது இதற்கு உதாரணமாக களுத்துறை இராணுவ ஓய்வு நிலையத்தை கூறலாம். இங்கு பாலியல் தொழிலாளர்களாக வன்னிப் பிரதேசத்திலிருந்து பெண்கள் கொண்டுவரப்படுகின்றார்கள்